மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கோவில்பட்டி

அ.வ.எண்.49 /2021

வாதி தரப்பு சாட்சி வாக்குமூலம் வா.சா.1.

---

பெயர். - திரு.ராஜ்

த/பெ. - திரு.பெருமாள்

கிராமம் - குமரெட்டியாபுரம்

தொழில் - விவசாயம்

தாலுகா - கயத்தார்

வயது - 60

1872-ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி 2025-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 27-ஆம் நாள் இந்நீதிமன்ற உதவியாளரால் சத்தியப்பிரமாண வாக்குமூலம் செய்யப்பட்டு, நிருபண வாக்குமூலம் தாக்கல் செய்யப்பட்டு, ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

முதல் விசாரணை.-

1) நான் இந்த வழக்கில் 1ம்வாதி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை நிருபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதை வாதிகள் தரப்பில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

| | |
|---|---|
| 1 | 10.08.1950 ல் பிராது தபசில் சொத்தை பொறுத்து பெருமாள் ரெட்டியார் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணம் அசல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 2 | 10.01.2004 ல் எனது தந்தை பெருமாள் ரெட்டியார் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 3 | 07.07.2015 ல் அழகம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 4 | பெருமாள் ரெட்டியார் அவர்களின் வாரிசு சான்றிதழ் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 5 | 11.12.2000 ல் பிராது தபசில் சொத்தை பொறுத்து காளியம்மாள் அவர்கள் சண்முகவேல் அவர்களுக்கு பதிவு செய்து கொடுத்த பதிவு கிரைய ஆவணம் கோவில்பட்டி சார்பதிவக அலுவலக ஆவண எண்.5071/2000 SRO நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 6 | 22.02.2021 ல் பிராது தபசில் சொத்தை பொறுத்து 5ம்பிரதிவாதி 1 முதல் 4 பிரதிவாதிகள் பிறப்பித்து கொடுத்த பதிவு பாக விடுதலை ஆவணம் கோவில்பட்டி சார்பதிவக அலுவலக ஆவண எண்.2140/2021 SRO நகல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 7 | 07.11.2020 ல் பிராது தபசில் சொத்தை பொறுத்த வில்லங்க சான்றிதழ் இணையதள நகல் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |
| 8 | நத்தம் நிலவரித்திட்ட துாய அடங்கல் பதிவேடு உண்மை நகல் **வா.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** |

பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணை - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறுதேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
27.03.2025.